பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 06 2024 **7.15 PM** **WENDESDAY**

ஆகாஷவாணி
தலைப்புச் செய்திகள்

- மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கு ஏதுவாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டுள்ளார்.
- தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவராக பிரதமர் திரு நரேந்திர மோடியை கூட்டணி தலைவர்கள் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.
- **I N D I** கூட்டணி கட்சிகள் தங்களது செயல் திட்டம் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.
- தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இடைக்கால ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை தில்லி நீதிமன்றம் நிராகரித்தது.
- உலகக்கோப்பை டிவெண்டி - டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

.---- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து 17-ஆவது மக்களவையை கலைப்பதற்கான பரிந்துரையை அளித்தார்.

புதிய அரசு அமைவதற்கு ஏதுவாக தாமும், தமது அமைச்சரவை சகாக்களுக்குமான ராஜினாமா கடிதங்களை அவர் அளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் புதிய அரசு அமையும் வரை பொறுப்பில் நீடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மத்திய அமைச்சர்களுக்கு இன்றிரவு குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருந்தளிக்கிறார்.

குடியரசுத் தலைவரை சந்தித்தபின் பிரதமர் திரு நரேந்திர மோடி, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரையும் சந்தித்து பேசினார்.

<<<<<<>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களின் கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி இல்லத்தில் இன்று மாலை நடைபெற்றது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மூன்றாவது முறையாக புதிய அரசை அமைப்பதற்கான செயல்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இதில், தெலுங்கு தேசம் கட்சித்தலைவர் திரு சந்திரபாபு நாயுடு, ஐக்கிய ஜனதாதள தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார், லோக் ஜன்சக்தி கட்சியின் ராம்விலாஸ் பிரிவின் தலைவர் திரு சிராக் பாஸ்வான் மற்றும் இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவராக பிரதமர் திரு நரேந்திர மோடி ஒருமனதாக தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏழை எளியோர் மகளிர், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் சமூகத்தில் பின்தங்கியவர்களின் மேம்பாட்டிற்காக புதிதாக அமையவுள்ள கூட்டணி அரசு உறுதியுடன் செயல்படும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைவதற்கு மேலும் பத்து சுயேட்சை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆதரவு கடிதங்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்றே குடியரசுத் தலைவரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, **'I N D I'** கூட்டணி கட்சி தலைவர்களின் ஆலோசனைக்கூட்டம் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இல்லத்தில் தொடங்கியுள்ளது.

அனைத்து கூட்டணித் தலைவர்களையும் திரு கார்கே வரவேற்றார்.

இக்கூட்டத்தில் தங்களது கூட்டணியின் அணுகுமுறை மற்றும் செயல்பாடுகள் குறித்து தலைவர்கள் விவாதித்து வருகின்றனர்.

<<<<<<>>>>>

18-ஆவது மக்களவை உறுப்பினர்களை வரவேற்பதாக மக்களவை செயலகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், புதிய உறுப்பினர்களை ஆன் லைன் முறையில் பதிவு செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மின்னணு முறையை முழு அளவில் கொண்டுவந்து காகிதமில்லா நடைமுறையை முழு அளவில் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய உறுப்பினர்கள் பாரத ஸ்டேட் வங்கியில் தங்களது கணக்குகளை தொடங்கவும், அடையாள அட்டை, மத்திய அரசின் சுகாதார திட்ட அட்டை ஆகியவற்றை உறுப்பினர்களுக்கு உடனடியாக வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை எட்டு மணிமுதல், இரவு எட்டு மணிவரை இம்மாதம் 14-ஆம்தேதிவரை உறுப்பினர்கள் பதிவு மேற்கொள்ளப்படும் என்றும் மக்களவை செயலகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் தாம் வகித்து வந்த துணை முதலமைச்சர் பதவியை திரு தேவேந்திர ஃபட்நாவிஸ் ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

பிஜேபி-யின் மூத்த தலைவரான திரு பட்நாவிஸ், மக்களவைத் தேர்தலில் தமது கட்சியின் வெற்றி திருப்திகரமாக அமையாததற்கு தார்மீக பொறுப்பேற்று இம்முடிவை எடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

தமது முழு நேரத்தையும் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்காக பயன்படுத்தப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 2019 தேர்தலில் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பிஜேபி 27 புள்ளி எட்டு நான்கு சதவீத வாக்குகளை பெற்றதாகவும், ஆனால் தற்போது நடந்து முடிந்த தேர்தலில், 26 புள்ளி ஒன்று எழு சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

2019-ல் 23 மக்களவைத் தொகுதிகளில் வெற்றிபெற்ற பிஜேபி, தற்போது ஒன்பது இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளதையும் திரு தேவேந்திர பட்நாவிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அம்மாநில முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு தேவேந்திர பட்நாவிஸின் முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில், கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இடைக்கால ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை தில்லி நீதிமன்றம் நிராகரித்தது.

தனி நீதிபதி திருமதி காவேரி பவேஜா, திரு கெஜ்ரிவாலின் மனுவை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவில் ஏழு நாட்கள் மருத்துவ காரணங்களுக்காக ஜாமீன் வழங்க முடியாது என்றும் திகார் சிறை அதிகாரிகள் திரு கெஜ்ரிவாலின் மருத்துவ தேவைகளை கவனித்துக்கொள்வார்கள் என்றும் உத்தரவிட்டார்.

திரு கெஜ்ரிவாலின், ஜாமீன் மனு வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவுள்ளதை சுட்டிக்காட்டிய நீதிபதி, இடைப்பட்ட காலத்தில் ஜாமீன் வழங்க இயலாது என்றும் கூறினார்.

<<<<<<>>>>>

தேசிய மாணவர் படையை மேம்படுத்துவதற்கான இரண்டு நாள் மாநாடு புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

இதன் நிறைவு விழாவில் பேசிய தேசிய மாணவர் படையின் தலைமை இயக்குனர் லெப்டினன்ட் ஜெனரல் **'Gurbi Pal Singh '** இந்திய இளைஞர்களுக்கு ஊக்கத்தை அளித்து அவர்களை பொறுப்புமிக்க குடிமக்களாக உயர்த்தும் பொறுப்பை தேசிய மாணவர் படை கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த ஓராண்டில் இளைஞர்களுக்கு உயர் தரத்திலான பயிற்சிகள் வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

அவர்களுக்கு உள்கட்டமைப்பு, போக்குவரத்து கட்டமைப்பு போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்ட பயிற்சிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

சமூக மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்களையும், தேசிய மாணவர் படை மூலம் மேற்கொள்ள வேண்டும் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் **'Gurbi Pal Singh** கூறினார்.

<<<<<<>>>>>

மும்பை I I T, உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் 118-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டு இந்த கல்விக்கழகம் 149-ஆவது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

நாட்டின் வடகிழக்கு மாநிலங்கள், மேற்குவங்கம் மற்றும் சிக்கிமில் அடுத்த ஏழு நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய இடங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, தில்லி, ராஜஸ்தானில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

மத்திய அரபிக்கடலில் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தையொட்டியுள்ள பகுதிகள், மகாராஷ்ட்ரா, தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேச கடலோர பகுதிகளிலும், சத்தீஸ்கர் மற்றும் ஒடிஷாவின் தென் பகுதிகளிலும் அடுத்த நான்கு நாட்களுக்குள் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான சூழ்நிலை நிலவுவதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை டிவெண்டி - டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

நியூயார்க்கில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

--------------

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேசி சௌத்ரி - ஸ்ரீவல்லி ராஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-1 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Soo Ha Jang – Ye Eun Kim** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அஷ்வினி பொன்னப்பா – தனிஷா கிராஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>